காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விளம்பி, மாதம் ஆவணி 30ம் நாள்**

**ஆங்கில மாதம் செப்டம்பர் 15ம் நாள், 2018, சனிக் கிழமை**

## இன்றைய குறள்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

( குறள் எண் : 35 )

## விளக்கம்

பிறர் மேன்மை கண்டு பொறாமை, புலன்கள் போகும் வழிச் செல்லும் ஆசை, இவை தடைபடும் போது வரும் கோபம், கோபத்தில் பிறக்கும் தீய சொல் எனும் இந்நான்கையும் விலக்கித் தொடர்ந்து செய்யப்படுவது அறம்.

## பொன்மொழி

எல்லோரிடமும் அன்பைக் கொடுத்து ஏமாந்து விடாதே ! யாரிடமும் அன்பைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றி விடாதே ! - விவேகானந்தர்

## இரண்டொழுக்கப் பண்பாடு

1. என்னையும், நான் இருக்கும் இடங்களையும் எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.
2. நல்ல பழக்க வழக்கங்களை தினமும் கற்றுக் கொள்வேன்.

## பழமொழி

A little learning is a dangerous thing

அரை குறை படிப்பு ஆபத்தானது

### பொது அறிவு

1. இந்தியாவில் வானொலி ஒலிபரப்பு தொடங்கப்பட்ட ஆண்டு
   - 1927
2. நேருவின் அமைதிக் கொள்கையின் பெயர் -
   - பஞ்சசீலக் கொள்கை

# இன்றைய செய்திகள்

- "எல்லா பிரிவு மக்களையும் உள்ளடக்கி, நல்லிணக்கமாக வாழும் வல்லமை உள்ளதால், இந்தியாவின் மகத்தான சக்தியை உலகம் அறிந்துள்ளது," என, பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- விமானத்தில் செல்லும் போது, மொபைல் போன் மற்றும் இன்டர்நெட் பயன்படுத்தும் சேவை, அடுத்த மாதம் செயல்பாட்டுக்கு வர உள்ளது.
- ஆண்டு தோறும் செப்டம்பர் 15-ம் தேதி .விஷ்வேஸ்வரய்யா பிறந்த நாளையொட்டி கட்டட பொறியாளர் தின விழாவாக கொண்டாடப்படுகிறது.
- 'வரதட்சணை கொடுமை தொடர்பான புகார் மீது, கமிட்டி அமைத்து விசாரணை நடத்திய பின், கைது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என்ற, தன் முந்தைய உத்தரவில், உச்ச நீதிமன்றம் மாற்றம் செய்துள்ளது. 'புகார் தொடர்பாக, போலீசார் விசாரணை நடத்தி, தேவைப்பட்டால் கைது நடவடிக்கை மேற்கொள்ளலாம்' என, தற்போது உத்தரவிட்டுள்ளது.
- ஈரானிடமிருந்து, கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்தாத நாடுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக, அமெரிக்கா மிரட்டல் விடுத்துள்ளது; இது, இந்தியாவுக்கு பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.
- ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டி நேற்று துபாயில் தொடங்கியது. இதில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஆறு நாடுகள் கலந்து கொள்கின்றன. இதில் இந்திய அணிக்கு ரோகித் சர்மா கேப்டனாக செயல்படவுள்ளார்